compose.kerala.gov.in
egazette.kerala.gov.in
printing.kerala.gov.in

Regn.No. KERBIL/2012/45073
dated 2012-09-05 with RNI
Reg No.KL/TV(N)/634/2021-2023

കേരള സർക്കാർ
GOVERNMENT OF KERALA

കേരള ഗസറ്റ്
KERALA GAZETTE

ആധികാരികമായി പ്രസിദ്ധപ്പെടുത്തുന്നത്
PUBLISHED BY AUTHORITY

ചൊവ്വ, 2026 ജൂലൈ 14
Tuesday, 14th July 2026

1201 മിഥുനം 30
30th Mithunam 1201

1948 ആഷാഢം 23
23rd Ashadha 1948

വാല്യം 15
Vol. XV

നമ്പർ **28**
No.

Part I -Section (iii)

Law Department

©
കേരള സർക്കാർ
GOVERNMENT OF KERALA
2026

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் -ஐ) துறை

அறிக்கை

எண் 69/ச.இ.ஐ 1/2024/சட்டம். திருவனந்தபுரம், 2025 நவம்பர் 1

1201 துலாம் 5

1947 கார்த்திகம் 10.

கேரள மாநில சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டபடியான மசோதாவிற்கு 2025-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப் பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி

கெ.ஜி.சனல் குமார்,

சட்டச் செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2025-ன் 13-வது சட்டம்

2025-ன் கேரள ஒற்றை குடியிருப்பு பாதுகாப்பு சட்டம்

மாநிலத்தில் செயல்படும் நிதி நிறுவனங்களிடமிருந்து ஒற்றை குடியிருப்பை அடமானம் வைத்து பெற்ற கடனைத் திருப்பி செலுத்தாத காரணத்தால் அடமானம் வைத்த ஒற்றை குடியிருப்பை இழந்து குடும்பங்கள் வெளியேற்றப்படும் நிலை ஏற்படுவதை தவிர்க்கவும் அத்தகைய நபர்களின் குடியிருப்பை பாதுகாப்பது உட்படயுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அது தொடர்பாகவோ அல்லது அதனுடன் இணைந்ததோ ஆன விஷயங்களுக்காக வழிவகை செய்யும்

ஒரு

சட்டம்

முன்னுரை.- மாநிலத்தில் செயல்படும் நிதி நிறுவனத்தில் ஒற்றை குடியிருப்பை அடமானம் வைத்து கடனெடுத்து திருப்பி செலுத்த முடியாததன் காரணமாக அடமானம் வைத்த ஒற்றை குடியிருப்பை இழந்து குடும்பங்கள் வெளியேற்றப்படும் நிலை ஏற்படுவதை தவிர்க்கவும் அத்தகைய நபர்களின் குடியிருப்பை பாதுகாப்பது உட்படயுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அது தொடர்பாகவோ அதனுடன் இணைந்ததோ ஆன விஷயங்களுக்கு வழி வகை செய்வது உகந்ததாக இருப்பதாலும்;

இந்திய குடியரசின் எழுபத்து ஆறாவது ஆண்டில் பின்வரும்படியான சட்டம் இயற்றப்படுகிறது:-

அத்தியாயம்-1

முன்னுரை

1. சுருக்கப்பெயர் மற்றும் தொடக்கம்.- (1) இந்த சட்டத்தை 2025-ன் கேரள ஒற்றை குடியிருப்பு பாதுகாப்பு சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது அரசு, அறிக்கை செய்யும் தேதியில் அமலுக்கு வருவதாகும்.

2. வரையறை.- இந்த சட்டத்தில், சூழல் வேறுவிதமாகத் தேவைப்படாத பட்சம்,-

(எ) ''மேல்முறையீடு'' என்றால் சட்டத்தின் பிரிவு 21-ன் கீழ் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடு என பொருள்படும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(பி) ''கடனாளி'' என்றால் மாநிலத்தில் செயல்படும் ஒரு நிதி நிறுவனத்தில் இருந்து தனதோ அல்லது ஜாமீன்தாரருக்கோ சொந்தமான ஒற்றை குடியிருப்பை அடமானம் வைத்து கடன் பெற்ற ஒரு நபர் அல்லது நபர்களைக் குறிக்கும் அதில் ஜாமீன்தாரரும் உட்படுவர்;

(சி) ''மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்புக் குழு'' என்றால் சட்டத்தின் பிரிவு 6-ன் அடிப்படையில் உருவாக்கப்படும் மாவட்ட அளவிலான குடியிருப்பை பாதுகாப்புக்குழு எனப்பொருள்படும்;

(டி) ''குடும்பம்'' என்பது கடனாளியின் மனைவி அல்லது கணவர், பிள்ளைகள், தந்தை அல்லது தயார் எனப்பொருள்படும்;

(இ) ''நிதி நிறுவனம்'' என்றால் மாநிலத்தில் செயல்படுவதும் 1934-ன் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின், (1934-ன் 2-வது மத்திய சட்டம்) இரண்டாம் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள ஒரு வங்கி அல்லது மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 45-ஐ உட்பிரிவு (எஃப்)-ன் பொருளுக்குள் வரும் ஒரு வங்கி சாரா நிதி நிறுவனம் அல்லது 1969-ன் கேரள கூட்டுறவுச் சங்க சட்டம் (1969-ன் 21)-படி பதிவு செய்யப்பட்டுள்ளதோ பதிவு செய்ததாக கருதப்படுவதோ ஆன சங்கம் எனப்பொருள்வடுவதும் அதில் அரசு அவ்வப்போது அறிவிக்கக்கூடிய பிற நிறுவனங்களும் உள்படுவதாகும்;

(எஃப்) ''நிதி'' என்றால் சட்டத்தின் பிரிவு 25-ன் அடிப்படையில் அமைக்கப்படவுள்ள நிதியைக் குறிக்கும்;

(ஜி) ''அரசிதழ்'' என்றால் மாநிலத்தின் அதிகாரபூர்வ அரசிதழைக் குறிக்கும்;

(எச்) ''அரசு'' என்றால் கேரள அரசு எனப்பொருள்படும்;

(ஐ) ''அறிக்கை'' என்றால் அரசிதழில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை எனப்பொருள்படும்;

(ஜெ) ''நிர்ணயிக்கப்பட்ட'' என்றால் இந்த சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட எனப்பொருள்படும்;

(கெ) ''மாநிலம்'' என்றால் கேரள மாநிலம் என பொருள்படும்;

(எல்) ''மாநில அளவிலான குடியிருப்புப் பாதுகாப்புக் குழு'' என்றால் சட்டத்தின் பிரிவு 13-ன் கீழ் அமைக்கப்பட்ட மாநில அளவிலான குடியிருப்புப் பாதுகாப்பு குழுவைக் குறிக்கும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அத்தியாயம் II

ஒற்றை குடியிருப்புக்கான பாதுகாப்பு

3. வழிகாட்டு நெறிமுறையைச் செயல்படுத்தல் குறித்தான அறிவிப்பு.- இந்த சட்டம், இந்திய அரசியலமைப்பின் 39-ஆம் விதித்தொகுப்பின் உட்பிரிவு (பி)-ல் குறிப்பிட்டுள்ளபடியான வழிகாட்டு நெறிமுறைகளை அடைவதற்கான மாநிலத்தின் கொள்கையை செயல்படுத்துவதற்காக உள்ளது என்பதை இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

4. ஒற்றை குடியிருப்புக்கான பாதுகாப்பு.- மாநிலத்தில் செயல்படும் நிதி நிறுவனத்தில் இருந்து ஒற்றை குடியிருப்பை அடமானம் வைத்து பெற்ற கடனைத் திருப்பி செலுத்தத் தவறியதன் மூலம் நிதி நிறுவனம் தொடர்ந்த சொத்து முடக்கம் அல்லது கடன் மீட்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக அத்தகைய குடியிருப்பை இழக்கும் குடும்பத்தினருக்கு, இந்த சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு, பாதுகாப்பு பெறுவதற்கு தகுதி உடையவராவர்.

5. தகுதி வரம்புகள்.- (1) இந்த சட்டத்தின் கீழ் பாதுகாப்பு பெறுவதற்கு, பின்வரும் தகுதி வரம்புகள் பாதகமாக இருக்கும், அதாவது:-

(i) கடன் தொகையானது அதிக பட்சம் ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருக்க வேண்டும்;

(ii) கடன் தொகை, வட்டி, அபராத வட்டி, பிற தொடர்பான செலவுகள் உட்படயுள்ள மொத்தத் திருப்பிச் செலுத்தும் தொகை அதிகபட்சம் பத்து இலட்சம் ரூபாய்க்கு மிகக் கூடாததாகும்;

(iii) அடமானம் வைக்கப்பட்ட சொத்தைத் தவிர, கடனாளியும் அவரது குடும்பத்தினருக்கும் அவரின் பெயரில் அல்லது கூட்டாகவோ வேறு சொத்துக்கள் அல்லது திருப்பி செலுத்துவதற்கான வேறு எந்த வழிகளையும் கொண்டிருக்கக் கூடாது;

(iv) கடனாளிக்கு அல்லது குடும்பத்தினருக்கு அவர் பெயரில் அல்லது கூட்டாகவோ சொந்தமாகக் கொண்டுள்ள மொத்த நிலப்பரப்பானது, நகராட்சி/மாநகராட்சி பகுதியில் ஐந்து சென்டுகளுக்கும் கிராம பகுதிகளில் பத்து சென்டுகளுக்கும் மிகாமல் இருக்க வேண்டும்;

(v) கடனாளி மற்றும் குடும்பத்தினர் ஈட்டும் மொத்த ஆண்டு வருவாய் அதிகபட்சமாக மூன்று இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருக்க வேண்டும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(vi) கடன் பெற்ற தேதிக்கு பிறகு கடனாளி அல்லது குடும்ப உறுப்பினர்கள் தங்களின் பெயரில் உள்ள ஏதேனும் சொத்துக்களை வேறு யாருக்கும் மாற்றியிருக்கக் கூடாது.

(vii) இச்சலுகையை பெறத் தகுதியுடைய நபர், ஆதார் அட்டை வைத்திருப்பவராக இருக்க வேண்டும்;

(viii) கல்வி, மருத்துவம், திருமணம், வீடு கட்டுதல்/வீடு புதுப்பித்தல், விவசாயம் மற்றும் சுயதொழில் மூலம் வாழ்வாதாரம் அமைத்தல் ஆகிய நோக்கங்களைத் தவிர, வேறு நோக்கங்களுக்காகப் பெறப்பட்ட கடன்களுக்கு இச்சட்டத்தின் பாதுகாப்பு கிடையாது.

(2) அரசுக்கு, அறிக்கை வாயிலாக, துணைப்பிரிவு (1)-ன் கீழ் குறிப்பிட்டுள்ள தகுதி வரம்புகளை அவ்வப்போது திருத்தம் செய்வதற்கான அதிகாரம் உள்ளது.

(3) கடனை திருப்பிச் செலுத்தும் பொறுப்பை அரசாங்கம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்றுக்கொண்டால், ஒரு குடும்பத்திற்கு அத்தகைய சலுகைகள் ஒரு குடும்பத்திற்கு ஒரு முறைக்கு மேல் பெறுவதற்குத் தகுதியுடையதாகாது.

அத்தியாயம் III

மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமம்

6. மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தை அமைத்தல்.- இந்த சட்டத்தின் நோக்கங்களுக்காக அரசு, அறிக்கை வாயிலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமம் அமைக்க வேண்டியதாகும்.

7. மாவட்ட அளவிலான குடியிருப்புப் பாதுகாப்பு குழுமத்தின் அமைப்பு.- (1) மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தில் பின்வரும் உறுப்பினர்கள் இருக்க வேண்டியதாகும், அதாவது:-

(i)	மாவட்ட வளர்ச்சி ஆணையர்	-	தலைவர்,உறுப்பினர் பதவி வழி;
(ii)	முதன்மை வேளாண்மை அதிகாரி	-	உறுப்பினர், பதவி வழி;
(iii)	பஞ்சாயத்து துணை இயக்குநர்	-	உறுப்பினர், பதவி வழி;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(iv) மாவட்ட பேரிடர் ஆணையத்தின் ஒரு பிரதிநிதி	-	உறுப்பினர், பதவி வழி;
(v) துணை ஆட்சியர் (பேரிடர் மேலாண்மை)	-	உறுப்பினர், பதவி வழி; இவர் மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் உறுப்பினர் செயலாளராகவும் செயல்படுவர்.
(vi) அரசு பெயர் பரிந்துரை செய்யும் கூட்டுறவுத்துறை மற்றும் வங்கித் துறையில் இருந்து தலா ஒரு பிரதிநிதி	-	உறுப்பினர், பதவி வழி;
(vii) முன்னணி மாவட்ட மேலாளர்	-	உறுப்பினர், பதவி வழி;

(2) மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்திற்கு, பிரிவு 8-ன் கீழ் பெறப்படும் விண்ணப்பத்தை பரிசோதிக்கவும் பரிந்துரைகள் வழங்கவும் மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் உறுப்பினர்களை உட்படுத்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளபடியான துணை குழுமங்கள் அமைக்கலாம்.

8. விண்ணப்பம்.- இந்த சட்டத்தின் கீழ் சலுகைகள் பெற வேண்டிய எந்தவொரு நபரும், வகுத்துரைக்கப்பட்டுள்ள படியான படிவத்தில் ஒரு விண்ணப்பம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களும், மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் முன்னர் சமர்ப்பிக்க வேண்டியதாகும்.

9. மாவட்ட அடிப்படையிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள்.- (1) மாவட்ட அடிப்படையிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்திற்கு பின்வரும் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் இருப்பதாகும், அதாவது:-

(i) பிரிவு 8-ன் கீழ் பெறப்படும் எந்தவொரு விண்ணப்பத்தின் மீதும் நிர்ணயித்துள்ள படியான முதற்கட்ட பரிசோதனையை நடத்தி, உரிய தரப்பினர் மற்றும் நிதி நிறுவன பிரதிநிதிகளுக்கு தங்கள் தரப்பு விளக்கத்தை அளிப்பதற்கான வாய்ப்பை வழங்கிய பின்னர், திருப்பி செலுத்தும் கடமைகளை இணக்கமாக தீர்ப்பதற்கு தேவையான நல்லிணக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதன் மூலம் திருப்பி செலுத்தும் தொகையை மறுசீரமைக்கவோ வட்டித்தொகையில் சலுகை அனுமதிக்கவோ தவணைகளை மறுசீரமைத்து கிடைக்கவோ வேறு

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஏதேனும் தற்காலிக கடன் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை உருவாக்குதல்;

(ii) கடனாளிக்கு அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களுக்கோ திருப்பி செலுத்துவதற்கான வழிகள் ஏதுமில்லை என்றோ உடன்பாடுகளுக்கு வாய்ப்பு இல்லை என்றும் மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமம் உணரும் பட்சம், அதற்கான காரணங்களை பதிவு செய்து, திருப்பிச் செலுத்தும் தொகையை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அரசு ஏற்றுக்கொள்வது உட்படயுள்ள பரிந்துரைகள் மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்திற்கு சமர்ப்பித்தல்.

(2) துணைப்பிரிவு (1)-ன் உட்பிரிவு (ii)-ன் கீழ் பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு முன்னர் மாவட்ட அடிப்படையிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமம் வகுத்துரைக்கப்பட்டுள்ள முறையிலான விசாரணையை நடத்தி, கீழ்காணும் விவரிக்கப்பட்டுள்ள ஆவணங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் விரிவான ஒரு அறிக்கை மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியதாகும், அதாவது:-

(i) நிர்ணயிக்கப்பட்ட முறையில் கணக்கிடப்பட்ட, அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் சந்தை மதிப்பு உள்ளிட்ட சொத்து மதிப்பீட்டு அறிக்கை;

(ii) கடனாளி அல்லது அவரது குடும்பத்தினர் அரசின் ஏதேனும் ஒரு வீட்டு வசதி திட்டத்தின் கீழ் வீட்டை பெற்றுள்ளனரா என்றும் அல்லது நிலம் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளதா என்பதற்கு தொடர்புடைய வட்டத்தின் வட்டாட்சியாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்;

(iii) அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களின் தற்போதைய சந்தை மதிப்பை, திருப்பிச் செலுத்தும் வகையில் வழங்கப்பட வேண்டிய தொகையுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது கடனைத் திருப்பிச் செலுத்துவது ஆதாயமானதாக இருக்குமா என்பது குறித்த மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் பரிந்துரை;

(iv) கடனைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பை முழுமையாகவோ பகுதியாகவோ அரசு ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக அரசின் ஏதேனும் ஒரு மறுவாழ்வுத் திட்டம் அல்லது வீட்டு வசதித் திட்டத்தில் சேர்த்து, வேறொரு குடியிருப்பை வழங்குவது குறித்த தேவை தொடர்பான அறிக்கை;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(v) கடன் திருப்பிச் செலுத்துதல் தடைபட்டதற்கான காரணங்கள் குறித்து மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் மதிப்பீடுகள்/கண்டறிதல்கள்;

(vi) அடமானம் வைக்கப்பட்ட சொத்தில் அமைந்துள்ள ஒரே ஒரு குடியிருப்பை மட்டும் பாதுகாத்து கொண்டு எஞ்சிய சொத்துக்கள்/கட்டுமானங்களை ஜப்தி அல்லது மீட்பு நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தான அறிக்கை;

(vii) மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் தலைமையில் மாநில அளவிலான வங்கியாளர்கள் குழு மற்றும் நிதி நிறுவன பிரதிநிதிகளுடனும் கலந்தாலோசனை செய்து அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் மீது நிதி நிறுவனம் எடுத்துள்ள சட்ட நடவடிக்கைகளை தவிர்க்கவும் விற்பனை நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவரவும் குடியிருப்பிலிருந்து வெளியேற்றாமல் இருப்பதற்குமான வழிமுறைகளை பின்பற்றுவதற்கான பிற பரிந்துரைகள்;

(viii) பரிந்துரைக்கப்படக்கூடிய பிற ஆவணங்கள்.

(3) பிரிவு 8-ன் கீழ் உள்ள ஒரு விண்ணப்பத்தில், மாவட்ட அளவிலான ஒரு குடியிருப்பு பாதுகாப்பு குழுமம் விண்ணப்பம் பெறப்பட்ட தேதி முதல் முப்பது வேலை நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டியதாகும்:

ஆனால் காலக்கெடுவை நீட்டிப்பதற்கு போதுமான காரணங்கள் உள்ளது என்று மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் தலைவர் உணரும் பட்சத்தில், அதற்கான காரணங்களை பதிவு செய்த பிறகு மேலும் பதினைந்து வேலை நாட்கள் கூட அனுமதிக்க அதிகாரம் உள்ளதாகும்.

10. மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் தலைமையகம்.- மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் தலைமையகம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்திருக்கும்.

11. அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள்.- மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் செயல்பாடுகளுக்கு தேவையான அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை பரிந்துரைக்கப்பட்ட முறையில் நியமிக்கலாம்.

12. கூட்டம், குறைந்த பட்ச வருகை நடவடிக்கை முறை ஆகியவை.- மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் கூட்டம், குறைந்தபட்ச

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

வருகை, அதன் நடவடிக்கை முறை போன்றவை பரிந்துரைக்கப்பட்ட முறையில் நடைபெறும்.

அத்தியாயம் IV

மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழு

13. மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் அமைப்பு.- இந்த சட்டத்தின் நோக்கத்திற்காக அரசு, அறிக்கை மூலம் மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுவை அமைக்க வேண்டும்.

14.மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் அமைப்பு.- மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தில் பின்வரும் உறுப்பினர்களை கொண்டிருக்கும், அதாவது:-

(i)	செயலாளர், திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகாரங்கள் துறை	-	தலைவர், பதவி வழி அலுவலர்;
(ii)	கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணைய உறுப்பினர் செயலாளர்	-	உறுப்பினர், பதவி வழி அலுவலர்;
(iii)	கூடுதல் இயக்குநர், வேளாண்துறை	-	உறுப்பினர், பதவி வழி அலுவலர்;
(iv)	மாநில அளவிலான வங்கியாளர்கள் குழுவின் ஒரு பிரதிநிதி	-	உறுப்பினர், பதவி வழி அலுவலர்;
(v)	கேரள வங்கியின் ஒரு பிரதிநிதி	-	உறுப்பினர், பதவி வழி அலுவலர்;
(vi)	நிதி (வளங்கள்) துறை செயலாளரால் பெயர் பரிந்துரைக்கப்பட்ட, துணை செயலாளர் பதவிக்கு குறையாத ஒரு அதிகாரி	-	உறுப்பினர், பதவி வழி அலுவலர்; இவர் மாநில அளவிலான குடியிருப்புப் பாதுகாப்பு குழுவின் உறுப்பினர் செயலாளராக இருப்பார்.

15. மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள்.- (1) மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுவின் அறிக்கை பெறப்பட்ட தேதி முதல் அறுபது வேலைநாட்களுக்குள், மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழு சம்மந்தப்பட்ட தரப்பினருக்குக் கருத்துத் தெரிவிக்க வாய்ப்பளித்த பின்னர், விண்ணப்பத்தை அனுமதித்தோ அல்லது

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

நிராகரித்தோ அல்லது விண்ணப்பத்தை மறுபரிசீலனை செய்ய மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுவிற்கு அறிவுரை வழங்கியோ எழுத்துபூர்வமாக ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டியதாகும்.

(2) விண்ணப்பத்தை மறுபரிசீலனை செய்ய மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்திற்கு அறிவுறுத்தப்படும் பட்சத்தில், மேற்கூறிய அறிவுறுத்தல் பெறப்பட்ட நாளிலிருந்து முப்பது வேலை நாட்களுக்குள் மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழு அதன் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதாகும்.

(3) மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுவிற்கு துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ளது மட்டுமல்லாமல், நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பின்வரும் முடிவுகளை எடுக்கலாம், அதாவது:-

(i) திருப்பி செலுத்தும் தொகை முழுமையாக அல்லது பகுதியாகவோ அரசு ஏற்றுக்கொண்டு நிதி நிறுவனத்தின் பொறுப்புகளை தீர்த்து குடியிருப்பை மீட்டல்;

(ii) அரசின் ஏதேனும் ஒரு மறுவாழ்வு திட்டத்தில் அல்லது வீட்டு வசதி திட்டத்தில் உட்படுத்தி மற்றொரு குடியிருப்பை வழங்குதல்;

(iii) பிரிவு 9-ன் துணைப்பிரிவு (1)-ல் உட்பிரிவு (i)-ன் படி மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழு நடவடிக்கை எடுக்கவில்லை என்றோ எடுத்த நடவடிக்கையில் ஏதேனும் குறைபாடு உள்ளது என்ற புகார் பெறப்பட்டால் மேற்கூறிய புகாரின் மீது விசாரணை நடத்திய பின்னர், தொடர் நடவடிக்கை சம்பந்தமான பரிந்துரைகள் மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள காலவரம்பிற்குள் வழங்குதல்;

(iv) பரிந்துரைக்கப்படக்கூடிய பிற முடிவுகள்.

16. திருப்பி செலுத்துதல் தொடர்பான நடவடிக்கைகள்.- (1) சட்டத்தின் பிரிவு 15-ன் துணைப்பிரிவு (3)-ல், உட்பிரிவு (1)-ன் படி திருப்பி செலுத்தும் தொகை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ எடுத்துக் கொள்ளும் பட்சத்தில், அத்தகைய திருப்பிச் செலுத்தல் தொகையை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் வாயிலாக நிதி நிறுவனத்தின் கணக்கில் செலுத்தும் பொறுப்பு மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தின் கடமையாகும்.

(2) திருப்பி செலுத்தும் தொகை நிதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு ஜப்தி அல்லது மீட்பு நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வரும் சூழலில், அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் உரிமைப் பத்திரம் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களும் நிதி நிறுவனத்தில்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

இருந்து திரும்பப் பெற்று அவற்றை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் தற்காலிகப் பாதுகாப்பில் வைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்குமான பொறுப்பு மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுமத்தினுடையதாகும்.

(3) ஐப்தி அல்லது மீட்பு நடவடிக்கைகள் முழுமையாக முடிவு வரும் பட்சத்தில், பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் உரிமைப் பத்திரம் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை உரிமையாளரிடம் திருப்பி செலுத்தும் பொறுப்பு மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுவின் கடமையாகும்.

17. ஜாமீன் வழங்கிய நபர் தொடர்பான சிறப்பு ஏற்பாடு.- முதன்மை கடனாளிக்கு திருப்பிச் செலுத்துவதற்கான வழிமுறைகள் இருந்தும் அவர் திருப்பி செலுத்த தவறி, ஜாமீன் நடவடிக்கைகளின் காரணமாக ஜாமீன்தாரரின் ஒற்றை குடியிருப்பு இழக்கும் நிலை ஏற்பட்டு, திருப்பு செலுத்தும் தொகை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அரசு ஏற்றுக்கொண்டால், திருப்பி செலுத்தும் தொகை பரிந்துரைத்துள்ளபடியான வட்டி மற்றும் இதர செலவுகளுடன் 1968-ன் கேரள வரி வசூலித்தல் சட்டம் (1968-ன் 15)-ன் படி நிலத்தின் மீது செலுத்த வேண்டிய பொது வருவாய் நிலுவையாக முதன்மை கடனாளியிடமிருந்து வசூலிக்கும் அதிகாரம் அரசுக்கு உண்டு.

18. மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுவின் தலைமையகம்.- மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுவின் தலைமையகம் திருவனந்தபுரத்தில் அமைந்திருக்கும்.

19. அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள்.- மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுவின் செயல்பாடுகளுக்கு தேவையான அதிகாரிகள் மற்றும் ஊழியர்களையும் அரசு, நிர்ணயிக்கும்படி, நியமிக்கலாம்.

20. கூட்டம், குறைந்த பட்ச வருகை, நடவடிக்கை முறை முதலியன.- மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுவின் கூட்டம், குறைந்தபட்ச வருகை, அதன் நடவடிக்கை முறை முதலியன பரிந்துரைக்கப்பட்ட முறையில் நடைபெறும்.

அத்தியாயம் V
மேல்முறையீடு

21. மேல்முறையீடு.- (1) மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுவின் முடிவால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும், மேற்கூறிய முடிவை எழுத்து பூர்வமாக பெற்ற நாளிலிருந்து முப்பது வேலை நாட்களுக்குள், தலைமை செயலாளர் அல்லது

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அவரால் இதற்காக பரிந்துரைக்கப்படும் ஒரு கூடுதல் செயலாளர் முன்னிலையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில் முறையே மேல்முறையீடு தாக்கல் செய்யலாம்:

ஆனால் உரிய நேரத்திற்குள் மேல்முறையீடு தாக்கல் செய்யாததற்கு மேல்முறையீட்டாளருக்கு போதுமான காரணம் உள்ளது என்று மேல்முறையீட்டு அதிகாரி திருப்தியுறும் பட்சத்தில், மேற்கூறிய அதிகாரிக்கு முப்பது நாட்கள் முடிந்த பிறகும் மேல்முறையீட்டை பெற்றுக்கொள்ளலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழுள்ள மேல்முறையீட்டு அதிகாரி, முறையீட்டாளரின் கருத்தை கூற நியாயமான வாய்ப்பை வழங்கி, மேல்முறையீட்டைப் பெற்ற தேதி முதல் முப்பது வேலை நாட்களுக்கும் மேல்முறையீட்டின் மீது முடிவெடுக்க வேண்டும்.

(3) துணைப்பிரிவு (2)-ன் கீழ் மேல்முறையீட்டு அதிகாரியால் எடுக்கப்பட்ட முடிவு இறுதியானதாக இருக்கும்.

அத்தியாயம் VI

கணக்குகள் மற்றும் தணிக்கை முதலியன

22. கணக்குகள் மற்றும் தணிக்கை.- (1) மாநில குடியிருப்பு பாதுகாப்பு குழு அதன் முறையான கணக்குகள் மற்றும் பிற தொடர்புடைய பதிவேடுகளை பராமரிக்க வேண்டியதும் மாநில கணக்காய்வு தலைவருடன் கலந்தாலோசித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்திலும் காலத்திலும் ஆண்டு கணக்கு அறிக்கையைத் தயாரிக்க வேண்டும்.

(2) மாநில குடியிருப்பு பாதுகாப்பு குழுவின் கணக்குகளை மாநில கணக்காய்வு தலைவர் ஒவ்வொரு நிதியாண்டும் தணிக்கை செய்ய வேண்டியதும் அத்தகைய தணிக்கை தொடர்பாக ஏற்படும் செலவை மாநில கணக்காய்வு தலைவருக்கு மாநில குடியிருப்பு பாதுகாப்பு குழு வழங்க வேண்டியதுமாகும்.

(3) இந்த சட்டத்தின் கீழுள்ள மாநில குடியிருப்பு பாதுகாப்பு குழுவின் கணக்குகளின் தணிக்கை தொடர்பாக மாநில கணக்காய்வு தலைவருக்கோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட வேறு எந்தவொரு நபரும், சாதாரணமாக மாநில கணக்காய்வு தலைவருக்கு அரசாங்க கணக்குகளின் தணிக்கை செய்யும் போதுள்ள அதே அதிகாரங்கள் மற்றும் சலுகைகள் கொண்டிருப்பதும், குறிப்பாக, புத்தகங்கள் மற்றும் கணக்குகள், தொடர்புடைய பற்றுச்சீட்டுகள், பிற ஆவணங்கள் மற்றும் தாள்களை சமர்ப்பிக்கக் கோரும் உரிமையைக் கொண்டிருப்பார்கள்.

(4) மாநில கணக்காய்வு தலைவர் அல்லது அவரால் இது தொடர்பாக நியமிக்கப்பட்ட வேறு எந்தவொரு நபராலும் சான்றளிக்கப்பட்டுள்ளபடியான மாநில குடியிருப்பு பாதுகாப்புக்குழுவின் முந்தைய நிதி ஆண்டிற்கான கணக்குகள், அதன்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

தணிக்கை அறிக்கை உள்ளிட்ட, மாநில குடியிருப்பு பாதுகாப்புக்குழு ஒவ்வொரு நிதியாண்டும் அக்டோபர் மாதம் 31-ஆம் தேதிக்கு முன்னர் அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டியதும், அரசு, அந்த அறிக்கையை உடனடியாக சட்டமன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டியதுமாகும்.

23. வரவு செலவு திட்டம்.- மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்புக்குழு ஒவ்வொரு நிதியாண்டும் முடிவிற்கு முன்னர், அடுத்த நிதியாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வரவுகள் மற்றும் செலவினங்கள் தொடர்பான ஒரு வரவு செலவு திட்டம் தயாரிக்க வேண்டியதும் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் அரசிற்கு சமர்ப்பிக்க வேண்டியதாகும்.

24. ஆண்டு அறிக்கை.- (1) மாநில குடியிருப்பு பாதுகாப்பு குழு ஒவ்வொரு நிதியாண்டும் மார்ச் மாதம் 31-ஆம் தேதிக்கு முடிவடைந்து முன் நிதி ஆண்டிற்கான தனது செயல்பாடுகளின் ஒரு ஆண்டு அறிக்கை நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்திலும், காலத்திற்குள்ளும் தயாரிக்க வேண்டியதும் அது அத்தகைய தேதிக்கு அல்லது அதற்கு முன்னர் அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டியதாகும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் ஒவ்வொரு அறிக்கையும் பெறப்பட்டவுடன் அரசு, அதனை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள், சட்டமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியதாகும்.

அத்தியாயம் VII
நிதி

25. நிதி.- (1) இந்த சட்டம் அமலுக்கு வந்த பிறகு முடிந்த அளவு விரைவாக, மேற்கூறிய சட்டத்தின் நோக்கத்திற்காக அரசு, அறிக்கை வாயிலாக, `கேரள குடியிருப்பு பாதுகாப்பு நிதி' என்ற பெயரில் ஒரு நிதியை உருவாக்க வேண்டியதாகும்.

(2) நிதியில் பின்வரும் தொகைகள் வரவு வைக்கப்பட வேண்டியதாகும், அதாவது:-

(i) அரசாங்கத்தால் அவ்வப்போது ஒதுக்கப்படும் மானியம்;

(ii) தனிநபர்கள், அமைப்புகள், நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகள்

(iii) முதலமைச்சரின் துயர நிவாரண நிதியிலிருந்து அரசாங்கத்தால் அவ்வப்போது ஒதுக்கப்படும் தொகை;

(iv) கூட்டுறவுத் துறையிலிருந்து பெறப்படும் நன்கொடைகள்;

(v) பரிந்துரைக்கப்பட்டுள்ள பிற வழிகளிலிருந்து பெறப்படும் தொகைகள்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(3) நிதியின் பாதுகாப்பு, பயன்பாடு, மேலாண்மை போன்ற நிர்ணயிக்கப்பட்டுள்ளபடியாக அமையும்.

அத்தியாயம் VIII

பலவகை

26.சட்டத்தின் நிர்வாகத்துறை சார்ந்து.- இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிர்வாகத் துறையாகத் திட்டமிடல் மற்றும் பொருளதார விவகாரங்கள் துறை செயல்படும்.

27. வழிகாட்டுதல் வழங்குவதற்கான அரசாங்கத்தின் அதிகாரம்.- இந்த சட்டத்தின் நோக்கத்திற்காக, அரசு, மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுவும் மற்றும் மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுவும் பின்பற்ற வேண்டிய பொதுவான அல்லது சிறப்பான வழிகாட்டுதல் ஆன அறிவுரைகள் அவ்வப்போது வழங்குவதற்கான அதிகாரம் உள்ளதாகும்.

28. பிற சட்டங்களின் கீழான நடவடிக்கைகளுக்கு முரணான பாதிப்பை ஏற்படுத்தாது.- இச்சட்டத்தின் விதிகள், நடைமுறையில் உள்ள ஏதேனும் ஒரு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கான நிதி நிறுவனத்தின் உரிமையை எவ்வகையிலும் எதிர்மறையாக பாதிக்காததும்; மேலும், பிற சட்டங்களுக்கு முரணாக அமையாமல், அவற்றுக்கு துணையாக அமையும்.

29. உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரம் உடையதாகயிருக்கும்.- (1) இந்த சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஏதேனும் விசாரணைக்காக மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுவும் மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழு மற்றும் மேல்முறையீட்டு அதிகாரிக்கு பின்வரும் காரியங்கள் தொடர்பான ஒரு விஷயத்தை விசாரணை செய்யும்போது 1908-ன் உரிமையியல் விதித்தொகுப்பு (1908-ன் 5-வது மத்திய சட்டம்)-ன் படி ஒரு உரிமையியல் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதே அதிகாரங்களை கொண்டிருக்கும், அதாவது:-

(எ) எந்தவொரு நபரும் நேரில் ஆஜராகுமாறு கட்டாயப்படுத்தல் அல்லது அவரைச் சத்தியப்பிரமாணத்தின் மீது விசாரித்தல்;

(பி) ஆதாரமாக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைக் கண்டறிந்து சமர்ப்பிக்குமாறு கோருதல்;

(சி) சத்திய வாக்குமூலத்தின் மீதான சாட்சியத்தை பெறுதல்;

(டி) சாட்சியானவர்களை விசாரிப்பதற்கான ஆணையத்தை நியமித்தல்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(2) மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழு மற்றும் மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழு மற்றும் மேல்முறையீட்டாளர் முன்னிலையில் நடைபெறும் எந்தவொரு விசாரணையும், 2023-ஆம் ஆண்டின் பாரதீய நியாய சம்ஹிதா, (2023-ன் 45-வது மத்திய சட்டம்)-ன் பிரிவுகள் 229 மற்றும் 267-ல் அடங்கியுள்ள பொருளின் படியான ஒரு நீதித்துறை சார்ந்த நடவடிக்கையாக கருதப்பட வேண்டியதும், மேற்கூறிய அதிகார இடங்களை 2023-ன் பாரதிய நாகரிக சுரக்ஷா சம்ஹிதயின் (2023-ன் 46-வது மத்திய சட்டம்)-ன் பிரிவு 215-ன் XXVIII -வது அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக ஒரு நீதிமன்றமாக கருதப்பட வேண்டியதாகும்.

30. நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கான பாதுகாப்பு.- இச்சட்டத்தின் படியோ அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் படியோ நல்லெண்ணத்தில் செய்யப்பட்டதோ அல்லது செய்ய எண்ணியுள்ளதோ ஆன ஏதேனும் விஷயம் குறித்து அரசுக்கு அல்லது அரசின் ஏதேனும் அதிகாரி அல்லது பணியாளருக்கு மாவட்ட அளவிலான குடியிருப்பு பாதுகாப்பு குழுவினுடையதோ மாநில அளவிலான குடியிருப்பு பாதுகாப்புக் குழுவினுடையதோ தலைவருக்கோ உறுப்பினர்களுக்கோ அதிகாரிகள் அல்லது ஊழியர்களுக்கு எதிராக எந்தவொரு வழக்கு குற்றவியல் நடவடிக்கை அல்லது பிற சட்ட நடவடிக்கைகளோ நிலைநிற்பதில்லை.

31.சிக்கல்களை நீக்குவதற்கான அதிகாரம்.- (1) இந்த சட்டத்தின் ஏற்பாடுகளை அமல்படுத்துவதில் ஏதேனும் சிக்கல் ஏற்படும் பட்சம், அரசுக்கு, அரசிதழில் விளம்பரம் செய்யப்பட்ட பொதுவானதோ சிறப்பு மிக்கதோ ஆன உத்தரவு வாயிலாக, அத்தகைய இடர்பாட்டை ஒழிக்க தேவையானதோ உகந்ததாக தோன்றும் இச்சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணல்லாததான ஏற்பாடுகள் இயற்றலாம்:

ஆனால், இந்த சட்டம் அமலுக்கு வந்த நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் கழிந்த பிறகு அத்தகைய எந்தவொரு ஆணையும் பிறப்பிக்கக் கூடாது.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் பிறப்பிக்கப்படும் எந்தவொரு உத்தரவும் அது பிறப்பிக்கப்பட்டவுடன் மிக விரைவாக சட்டப்பேரவை முன்னிலையில் வைக்க வேண்டியதாகும்.

32. விதிகளை உருவாக்கும் அதிகாரம்.- (1) அரசுக்கு, அறிக்கை மூலம், இந்த சட்டத்தின் விதிகளை செயல்படுத்துவதற்காக, முற்கால அமலாக்கத்துடன் அல்லது பிற்கால அமலாக்கத்துடனோ ஆன விதிகளை உருவாக்கலாம்.

(2) இந்த சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட எந்தவொரு விதியும், அது உருவாக்கப்பட்டவுடன் முடிந்த அளவு விரைவாக, சட்டப்பேரவை கூட்டத்தொடரின் போது, ஒரு கூட்டத்தொடரில் அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களிலோ உள்ள மொத்த பதினான்கு நாட்களுக்கு அதன் முன் வைக்கப்பட வேண்டியதும் அவ்வாறு

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனைத் தொடரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர், சட்டமன்றம் மேற்கூறிய விதியில் ஏதேனும் திருத்தம் செய்தாலோ அல்லது அந்த விதி உருவாக்க வேண்டியதில்லை என்று முடிவு செய்தாலோ, அந்த விதி அதன் பிறகு, சூழலுக்கு ஏற்றாற்போன்று, அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட படியாக மட்டுமே நடைமுறைக்கு வருவதோ அல்லது நடைமுறைக்கு வராமல் போகும்; இருப்பினும், அத்தகைய ஏதேனும் திருத்தம் அல்லது இரத்து செய்தல் அந்த விதியின் கீழ் முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் சங்கதியின் செல்லுபடியாதலுக்கு பாதகமாகாத வகையில் இருக்க வேண்டியதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் - பி) துறை

அறிக்கை

எண்:104/ச.இ.பி1/2025/சட்டம். திருவனந்தபுரம், 2026 மார்ச் 5

1201 கும்பம் 21

1947 பால்குனம் 14

கேரள மாநில சட்டப் பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட படியான மசோதாவிற்கு 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி,

கெ.ஜி.சனல் குமார்,
சட்ட செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2026-ன் 3-வது சட்டம்

2025-ன் மலையாள மொழி சட்டம்

இந்திய அரசியலமைப்பிற்கு உட்பட்டு கேரள மாநிலத்தின் ஆட்சி மொழியாக மலையாள மொழியை ஏற்றுக்கொள்வதற்கும் அனைத்து அலுவல் தேவைகளுக்கும் மலையாளத்தை பயன்படுத்துவதற்கும் கேரளத்தின் அனைத்து துறைகளிலும் மலையாள மொழியின் பயன்பாட்டை வகை செய்வதற்கும் மலையாள மொழியின் வளர்ச்சி பராமரிப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் அதனுடன் தொடர்புடையதோ அவற்றிற்கு ஏற்புடையதோ ஆன காரணங்களுக்காக ஏற்பாடு செய்வதற்கான

ஒரு

சட்டம்

முன்னுரை.- இந்திய அரசியலமைப்பிற்கு உட்பட்டு கேரள மாநிலத்தின் ஆட்சி மொழியாக மலையாள மொழியை ஏற்றுக்கொள்வதற்கும் அனைத்து அலுவலக தேவைகளுக்கும் மலையாளத்தை பயன்படுத்துவதற்கும் கேரளத்தின் அனைத்து துறைகளிலும் மலையாள மொழியின் பயன்பாட்டை வகை செய்வதற்கும் மலையாள மொழியின் வளர்ச்சி, பரவல் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் அதனுடன் தொடர்புடையதோ அவற்றுக்கு ஏற்புடையதோ ஆன காரணங்களுக்காக ஏற்பாடு செய்வது உகந்ததாக இருப்பதால்;

இந்திய குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் பின்வரும் படியாக சட்டம் இயற்றப்படுகிறது:-

அத்தியாயம் I

தொடக்கம்

1.சுருக்கத் தலைப்பும் தொடக்கமும்.- (1) இந்த சட்டம் 2025-ன் மலையாள மொழி சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது உடன் அமலுக்கு வருவதாகும்.

2. வரையறைகள்.- இந்த சட்டத்தில் சந்தரப்பம் பிற வகையில் தேவைப்படாத பட்சம்,-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(எ) ''அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி'' என்றால் இந்த சட்டத்தின் நிர்வாக பொறுப்பிலுள்ள அரசு செயலாளரோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய அலுவலகரோ எனப் பொருள்படும்;

(பி) ''முதல் மொழி'' என்றால் மொழியியல் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக கட்டாயமாக பயிற்றுவிக்கப்பட வேண்டிய மொழி எனப் பொருள்படும்;

(சி) ''அரசு'' என்றால் கேரள அரசு என்று பொருள்படும்;

(டி) ''மொழி சிறுபான்மையினர்'' என்றால் பாரம்பரியமாக கருத்துப் பரிமாற்றத்திற்கு தமிழ் மற்றும் கன்னட மொழிகளை பயன்படுத்தி வருபவர்களையும் கேரள மாநிலத்தில் மொழி சிறுபான்மை பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் எனப் பொருளப்படும் ;

(இ) ''அலுவல் மொழி'' என்றால் அலுவல் தேவைகளுக்கான கருத்து பரிமாற்றத்திற்காக மாநிலத்தில் பயன்படுத்தப்படும் மொழி எனப்பொருள்படும்;

(எஃப்) ''பரிந்துரைக்கப்பட்ட'' என்றால் இந்த சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளால் பரிந்துரைக்கப்பட்ட எனப்பொருள்படும்;

(ஜி) ''மாநிலம்'' என்றால் கேரள மாநிலம் எனப்பொருள்படும்;

அத்தியாயம் II

மலையாள மொழி மேம்பாட்டு துறை மற்றும் மலையாள மொழி மேம்பாட்டு இயக்குனரகமும்

3. மலையாள மொழி மேம்பாட்டு துறை மற்றும் மலையாள மொழி மேம்பாட்டு இயக்குனரகமும்.- (1) அரசு தலைமை செயலகத்தில் தற்போதுள்ள பணியாளர் நிர்வாக சீர்திருத்தம் (ஆட்சி மொழி) துறையை மலையாள மொழி மேம்பாட்டு துறை என மறுபெயராக்கம் செய்யப்பட வேண்டும்.

(2) அரசு, துணைப்பிரிவு (1)-ன் கீழுள்ள துறையின் கட்டுப்பாட்டில் அரசின் பல்வேறு துறைகளில் இருந்துள்ள அதிகாரிகளை மாற்று பணி அமர்வு செய்து மலையாள மொழி மேம்பாட்டு இயக்குநரகத்தை அமைக்க வேண்டியதும் அத்தகைய இயக்குநரகம் பரிந்துரைக்கும் படியான கடமைகளை செயல்படுத்திட வேண்டும்.

அத்தியாயம் III

ஆட்சி மொழியின் பயன்பாடு

4. சட்டமியற்றும் துறை.- (1) மாநிலத்தின் சட்டமியற்றுதல் தொடர்பாக 1963-ன் ஆட்சிமொழி சட்டத்திற்கு (1963 ன் 19-வது மத்திய சட்டம்) உட்பட்டு,-

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(i) கேரள மாநில சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்படும் மசோதாக்கள் மற்றும் சட்டப்பேரவை நிறைவேற்றும் சட்டங்கள் ஆகியவற்றிலும்;

(ii) இந்திய அரசியலமைப்பின் 213-வது விதி தொகுப்பின் படி கேரள ஆளுநரால் அறிவிக்கப்படும் அவசரச்சட்டங்களிலும்;

(iii) இந்திய அரசியலமைப்பின் படியோ, நாடாளுமன்றம் அல்லது கேரள மாநில சட்டப்பேரவையால் இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தின்படியோ அரசு வெளியிடும் ஆணைகள், விதிகள், ஒழுங்குமுறைகள் அல்லது துணை விதிகளில் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி மலையாளமாக இருக்க வேண்டியதும் அவ்வாறு மலையாள மொழியை பயன்படுத்தும் போது அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பையும் வெளியிட வேண்டியதாகும்.

(2) ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள முக்கியமான மத்திய சட்டங்கள் மற்றும் மாநில சட்டங்கள் அவற்றில் ஏற்படுத்தியுள்ள திருத்தங்களை உட்படுத்தி மலையாளத்தில் பரிந்துரைக்கப்படக்கூடிய காலவரையறைக்குள் மொழி பெயர்த்தல் செய்ய வேண்டும்.

(3) சட்டங்களின் கீழ் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள விதிகளின் மலையாள மொழிபெயர்ப்பும் பரிந்துரைக்கப்படக்கூடிய காலவரையறைக்குள் வெளியிட வேண்டும்.

5. ஆட்சி மொழி பிரிவு.- (1) இந்திய அரசியலமைப்பின் 346, 347 விதி தொகுப்புகளுக்கு உட்பட்டு கேரள மாநிலத்தின் அனைத்து அலுவல் நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி மலையாளமாக இருக்க வேண்டும்.

(2) மாநில அரசின் கீழ் தற்போதுள்ளதும் புதிதாக உருவாக்கப்படவுள்ள அனைத்து துறைகளுக்கும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் மாநில அரசின் கீழுள்ள அரசு உதவி பெறும், தன்னாட்சி, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் துணைப்பிரிவு (1) பொருந்துவதாகும்:

ஆனால் மத்திய அரசு, மத்திய அரசு நிறுவனங்கள், பிற நாடுகள், பிற மாநிலங்கள், உயர் நீதிமன்றம் உச்சநீதிமன்றம் போன்றவற்றுடனான கடித தொடர்புகளுக்கும் சட்டரீதியிலான ஆங்கிலத்தை பயன்படுத்த வேண்டியுள்ள பிற ஏதேனும் சந்தர்ப்பங்களிலும் மாநிலத்தின் சிறுபான்மை மொழிகளான தமிழ், கன்னடம் அல்லாத பிற மொழிகளை பேசுபவர்களின் கடித தொடர்புகளிலும் ஆங்கிலத்தை பயன்படுத்தலாம்.

6. கல்வி மற்றும் ஆராய்ச்சி துறை.- (1) கேரளாவில் உள்ள அனைத்து மாநில அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் X-ஆம் வகுப்பு வரை முதல் மொழியாக கட்டாயம் மலையாளம் இருக்க வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(2) மாநிலத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் மலையாள மொழியின் பரவலை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(3) மலையாள மொழி அல்லாத வேறு ஏதேனும் மொழியை தாய்மொழியாக கொண்ட மாணவர்களுக்கு அவர்களின் தாய்மொழியுடன் மலையாள மொழியையும் கற்பதற்கான வாய்ப்பை வழங்கிட வேண்டும்.

7. பிற மாநில-மொழி சிறுபான்மையினர் தொடர்பான சிறப்பு விதிமுறைகள்.- பிரிவு 5 அல்லது பிரிவு 6-ல் என்னதான் அடங்கியிருந்தாலும்,-

(1) மாநிலத்தில் உள்ள தமிழ் மற்றும் கன்னட மொழி சிறுபான்மையினர் மாநில அரசு தலைமை செயலகம் மற்றும் துறை தலைர்களுடன் இந்த விஷயத்தில் மொழி சிறுபான்மை பகுதிகளாக அரசால் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள மாநில அரசின் அனைத்து உள்ளூர் அலுவலகங்களுடனான அவர்களின் கடித தொடர்புகளில் அவர்களின் மொழிகளைப் பயன்படுத்தவும் அத்தகைய சந்தர்ப்பங்களில் அனுப்பப்படும் பதில்கள் அந்தந்த சிறுபான்மை மொழிகளிலேயே இருக்க வேண்டியதுமாகும்.

(2) மலையாள மொழி அல்லாத பிற ஏதேனும் மொழியை, தாய்மொழியாக கொண்ட மாணவர்களுக்கு தேசிய கல்வி பாடத்திட்டத்திற்கு ஏற்ப, அவர்களுக்கு விருப்பமுடையதும் மாநிலத்தின் பள்ளிகளில் உள்ளதுமான மொழிகளைத் தேர்ந்தெடுத்து கொள்ளலாம்.

(3) பிற மாநிலங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கேரளாவிற்கு வந்து கல்வி பயில்கின்ற மாணவர்களைப் பொறுத்தவரை IX-ஆம் வகுப்பு, X-ஆம் வகுப்பு மற்றும் மேல்நிலை பள்ளி அளவில் மலையாளம் தேர்வு எழுத வேண்டிய கட்டாயமில்லை.

8. ஒருங்கிணைந்த எழுத்துரு வடிவமைப்பு.- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையின் வளர்ச்சிக்கு ஏற்ப ஒருங்கிணைந்த எழுத்துரு வடிவமைப்பு பரிந்துரைக்கப்படலாமெனும் படி செயல்படுத்தப்பட வேண்டும்.

அத்தியாயம் IV
நீதிமன்ற மொழி

9. நீதிமன்ற மொழி.- (1) உயர்நீதிமன்றத்தின் அனுமதியுடன், மாவட்ட நீதிமன்றங்கள் வரையிலான நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படும் மொழியும் வழக்குகளின் தீர்ப்புகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் கட்டம் கட்டமாக மலையாள மொழி பெயர்ப்பிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

மேற்குறிப்பிட்ட தேவைகளுக்கான அடிப்படை வசதிகள் பரிந்துரைக்கப்படலாமெனும்படி அரசு வழங்கிட வேண்டும்.

(2) உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்வதற்கு தேவையான தீர்ப்புகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வழங்குவதற்கான முறை பரிந்துரைக்கப்படலாமெனும்படி மாவட்ட அளவில் ஏற்பாடு செய்யப்பட வேண்டியதுமாகும்.

(3) பிற ஏதேனும் சட்டத்தில் என்னதான் அடங்கியிருந்தாலும், அரசின் கீழுள்ள உதவி பெறும் நீதி சார் அதிகாரமுள்ள அனைத்து நிறுவனங்களிலும் ஆணைகள் அல்லது தீர்ப்பு மலையாள மொழியில் இருத்திட வேண்டியதுமாகும்.

ஆனால் மொழி சிறுபான்மையினர் தொடர்பான ஆணைகள் அவர்களின் தாய்மொழியிலோ அல்லது ஆங்கிலத்திலோ இருத்திட வேண்டும்.

அத்தியாயம் V

பொதுவான மொழியை பரப்புவதற்கான நடவடிக்கைகள்

10. பொதுவான மொழியை பரப்புவதற்கான நடவடிக்கைகள்.- (1) அரசு அல்லது அரசின் கீழுள்ள தன்னாட்சி, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் பெயர், அதிகாரிகளின் பெயர் மற்றும் பதவிப்பெயர் ஆகியவை உள்ள பலகைகள், மேற்குறிப்பிட்ட நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள உள்ள வாகனங்களின் பலகைகள் ஆகியவை மலையாளத்திலும் ஆங்கிலத்திலும் பரிந்துரைக்கப்படலாமெனும்படி இருத்திட வேண்டும்.

(2) அரசு அல்லது உள்ளாட்சி நிறுவனங்களின் அனுமதியுடன் மற்றும் அங்கீகாரத்துடன் செயல்படும் வணிக-தொழில்-வியாபார நிறுவனங்கள், அறக்கட்டளைகள், ஆலோசனை மையங்கள், மருத்துவமனைகள், ஆய்வகங்கள், சுற்றுலா மையங்கள், ஹோட்டல்கள் ஆகியவற்றின் பலகைகள் முதல் பாதி மலையாளத்திலும் இரண்டாம் பாதி ஆங்கிலத்திலும் இருக்க வேண்டும்.

(3) மாநிலத்தின் பல்வேறு துறைகளினுடையவும் அரசு உதவிபெறும், கூட்டுறவு நிறுவனங்களின் மாநிலத்தின் உள்ளாட்சி நிறுவனங்களின் மேற்பார்வையில் நிறுவப்படும் பலகைகளில் காட்சிப்படுத்தும் விவரங்கள் மலையாளத்தில் அமைந்திருக்க வேண்டியதுமாகும். தேவைப்படும் பட்சம், அத்தகைய பலகைகள் ஆங்கிலத்திலோ அல்லது பிற மொழிகளிலோ பரிந்துரைக்கப்படலாமெனும் படி காட்சிப்படுத்தலாம்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(4) அரசு அல்லது உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து ஏதேனும் சலுகையை பெற்றுகொண்டு செய்கின்ற எந்தவொரு செயல்பாடு தொடர்பாக நிறுவப்படும். பலகைகள் மலையாளத்திற்கு முக்கியத்துவம் அளித்து காட்சிபடுத்தப்பட வேண்டும்.

(5) அரசின் கீழ் உள்ளதோ அரசிடமிருந்தோ அவை சார்ந்த நிறுவனங்களிடமிருந்தோ உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்தோ ஏதேனும் வகையிலான மானியம் அல்லது சலுகையை பெற்று செயல்படுத்தப்படும் எந்தவொரு தொழில் முனைவுகளுடன் தொடர்புடைய பலகைகள், விளம்பரங்கள், ரசீதுகள், அறிவிப்புகள் போன்றவை மலையாளத்தில் குறிப்பிட வேண்டும்.

(6) மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்டதோ விற்பனை செய்யப்படுவதோ ஆன அனைத்து தொழில் உற்பத்தி பொருட்களிலும் அவற்றின் பெயர் மலையாளத்திலும் பதிவு செய்ய வேண்டியதும் அவற்றின் பயன்பாட்டு முறையை விளக்கும் உற்பத்தி பொருட்களும் மலையாளத்தில் இருக்க வேண்டும்.

(7) அரசு வெளியிடும் விளம்பரங்கள், வெளியிடப்படுகின்ற அறிக்கைகள் ஆகியவை கேரளவிற்குள் வெளியிடுவதற்காக உத்தேசிக்கப்பட்டவை மலையாளத்தில் இருக்க வேண்டும்:

ஆனால் பிற மொழிகளில் வெளியாகும் ஊடகங்களில் அந்தந்த மொழிகளில் அத்தகைய விளம்பரங்கள் தேவையெனில் வெளியிடலாம்.

(8) அரசு நடத்துகின்ற திட்டங்களின் சிற்றேடுகள், தகவல்கள், அறிவிப்புகள் போன்றவை மலையாளத்தில் கிடைக்க செய்யப்பட வேண்டும்.

(9) மாநிலத்தில் பொதுமக்களின் அறிவிற்காக வெளியிடப்படும் விளம்பரங்கள், பலகைகள், அறிவிப்புகள் போன்றவையும் மாநிலத்தில் வெளியிடப்படும் செய்திதாள்கள், சமகாலப் பத்திரிகைகள் ஆகியவற்றில் வெளியிடும் அரசு விளம்பரங்கள் ஆகியவற்றிலும் அவற்றின் பரப்பளவில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் மலையாளத்தில் அமைந்திருக்க வேண்டும். ஆங்கிலம் கட்டாயமாக பயன்படுத்த வேண்டிய சூழல்கள் தவிரயுள்ள சந்தர்ப்பங்களில் விளம்பரங்கள் மலையாளத்தில் இருக்க வெண்டும்:

ஆனால் தமிழ், கன்னட மொழிச்சிறுபான்மை பகுதிகளில் அவர்களும் தெரிந்து கொள்வதற்காக வெளியிடப்படும் விளம்பரங்கள், அறிவிப்புகள், பலகைகள், அறிக்கைகள் ஆகியவை அந்தந்த பகுதியின் சிறுபான்மை மொழியிலும் வெளியிடப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அத்தியாயம் VI

தகவல் தொழில் நுட்ப துறையில் மலையாள மொழியின் பயன்பாடு

11. தகவல் தொழில் நுட்ப துறையில் மலையாள மொழியின் பயன்பாடு.- (1) தகவல் தொழில்நுட்ப துறையில் மலையாள மொழியின் பயன்பாட்டை திறம்பட செய்வதற்காக சார்பற்ற மென்பொருள்களையும் அவை சார்ந்த முறைகளையும் மேம்படுத்த வேண்டியதும் பரிந்துரைக்கப்படக்கூடிய முறையில் தகவல் தொழில் நுட்ப துறை அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(2) அரசின் பல்வேறு துறைகளினுடையவும், அரசு உதவி பெறும் நிறுவனங்கள் உள்ளாட்சி, கூட்டுறவு, பொதுத்துறை நிறுவனங்களின் இணையதளங்களில் உள்ள விவரங்கள் மலையாளத்திலும் கிடைக்க செய்ய வேண்டியதும் டி.ஃபோழ்ட்பேஜ் மலையாளத்தில் இருக்க வேண்டியதும் மொழியை தேர்ந்தெடுத்து பயன்படுத்தும் வகையில் இணையதளத்தை தயார்படுத்திட வேண்டும்.

(3) அரசு துறைகளில் செயல்படுத்தப்படும் இ-நிர்வாக திட்டத்தில் (மொபைல் கவேணன்ஸ் உட்பட) அடிப்படை மொழி இருத்தல் வேண்டும்.

12. மலையாள மொழியை பரப்புவதற்காக வழங்கப்படும் ஊக்கத்தொகைகள்.- மலையாள மொழியின் பரவலை செயற்திறனுடையதாக்க தகவல் தொழில்நுட்ப விஷயங்கள் உட்பட ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அரசுக்கு சமர்ப்பிப்பவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான திட்டம் தீட்டப்பட வேண்டும்.

13. இந்த சட்டம் பிற சட்டங்களின் விளைவை மீறி செயல்படாது.- இந்த சட்டத்தின் விதிமுறைகள் அமலிலுள்ள சட்டங்களின் விதிமுறைகளுக்கு கூடுதலாக அமைந்திருக்குமே தவிர அவற்றை மீறும் விளைவை கொண்டிருக்காததாகும்.

14. விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரம்.- (1) அரசு, அரசிதழ் அறிக்கை வாயிலாக, இந்த சட்டத்தின் தேவைகளை செயல்படுத்துவதற்காக, முற்கால அமலாக்கத்துடனோ பிற்கால அமலாக்கத்துடனோ விதிகளை உருவாக்கலாம்.

(2) இந்த சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் எந்தவொரு விதியும் அவை உருவாக்கப்பட்டவுடன் இயன்றளவு விரைவாக சட்டமன்ற கூட்டத்தொடரில் இருக்கும்போது அதன் முன்பாக ஒரு கூட்டத்தொடரிலோ அல்லது அடுத்தடுத்த இரண்டு கூட்டத்தொடர்களிலோ உள்ளடங்கிய மொத்தம் பதினான்கு நாட்களுக்கு வைக்கப்பட வேண்டியதும் அவ்வாறு அது எந்த கூட்டத்தொடரில் வைக்கப்படுகிறதோ அந்த கூட்டத்தொடரோ அல்லது தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, சட்டமன்றம் மேற்குறிப்பிட்ட விதியில் ஏதேனும் திருத்தம் ஏற்படுத்தவோ அல்லது அந்த விதி இயற்றப்பட கூடாது என முடிவு செய்கின்ற பட்சம், அந்த விதிக்கு அதற்கு பிறகு

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அதது காரியம் போல், அவ்வாறு திருத்தம் ஏற்படுத்தப்பட்ட வடிவத்தில் மட்டுமே அமல்ாக்கத்தில் இருக்கவோ அல்லது எந்தவொரு அமலாக்கமும் இல்லாமல் இருப்பதும் ஆகும்; எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் திருத்தம் செய்தல் அல்லது இரத்து செய்தல் அந்த விதியின் கீழ் முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் விஷயத்தின் செல்லுபடி தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இருக்க வேண்டியதாகும்.

15. இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.- (1) இந்த சட்டத்தின் விதிமுறைகளை செயல்படுத்துவதில் ஏதேனும் இடர்பாடுகள் ஏற்படும் பட்சம், அரசு, அரசிதழில் வெளியிட்ட உத்தரவு மூலம், அத்தகைய இடர்பாடுகளை நீக்குவதற்கு தேவையென்றோ உகந்ததென்றோ அவைக்கு தோன்றுவதும் இந்த சட்டத்தின் விதிமுறைகளுக்கு முரணாக இல்லாததுமான விதிமுறைகளை உருவாக்கலாம்:

ஆனால் அத்தகைய எந்தவொரு உத்தரவும் இந்த சட்டத்தின் ஆரம்ப தேதி முதல் இரண்டு வருடத்திற்கு பிறகு பிறப்பிக்கப்படக்கூடாது.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு உத்தரவும் அவை பிறப்பிக்கப்பட்ட பிறகு, இயன்றளவு விரைவாக, சட்டமன்றப்பேரவையின் முன்பாக வைக்கப்பட வேண்டும்.

16. இரத்து செய்தலும் காப்பும்.- (1) 1969-ன் கேரள ஆட்சி மொழி சட்டம் (1969-ன் 7) இதனால் இரத்து செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு இரத்து செய்யப்பட்ட போதிலும், மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் செய்த ஏதேனும் காரியமோ எடுத்த ஏதேனும் நடவடிக்கையோ இந்த சட்டத்தின் கீழ் செய்ததாகவோ எடுத்ததாகவோ கருதப்பட வேண்டும்.

PUBLISHED BY THE SUPERINTENDENT OF GOVERNMENT PRESSES
AT THE GOVERNMENT CENTRAL PRESS, THIRUVANANTHAPURAM, 2026.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

Digitally signed by V JAYAKUMAR
Date:2026.07.14 04:00:53 +05:30